TNVR230000312024

சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்.

**முன்னிலை - திரு. M. சண்முகவேல்ராஜ், B.A., B.L., L.L.M.,**

சார்பு நீதிபதி, இராஜபாளையம்.

2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 14 ம் நாள் செவ்வாய்கிழமை

**O.S. No.365/2024**
**( CNR – TNVR230000312024)**

-------------

G. சக்கரை ..... வாதி

**//எதிர்//**

1) D. வசந்தகுமார்

2) V. ரேவதி ..... பிரதிவாதிகள்

இந்த வழக்கானது திருவில்லிபுத்தூர் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.41/2017 ஆக கடந்த 04.02.2017 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு வழக்கு விசாரணை நிலுவையில் இருந்து வந்த நிலையில், ஸ்ரீவில்லிப்புத்தூர் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, பின்னர் அதிகார வரம்பிற்குட்பட்டு இந்த வழக்கானது இராஜபாளையம் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.365/2024 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு 15.06.2026 ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பாலசுப்பிரமணியன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.மாரிமுத்து அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், வாதியின் வழக்குரை, பிரதிவாதியின் எதிர்வழக்குரை மற்றும் வழக்கு ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் .....

**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

**தீர்ப்புரை**

பிரதிவாதி ரூ.7,97,200.00/-யை வாதிக்கு செலுத்துமாறு உத்தரவு பிறப்பித்து, அதில் அசல் தொகை ரூ.6,00,000.00/-க்கு பிராது தேதி முதல் தீர்ப்பு தேதிவரை ஒப்பந்தப்படி மாதம் 1 க்கு ரூ.1/- வீதம் வட்டியும், தீர்ப்பு தேதி முதல் வசூலாகும் தேதிவரை நீதிமன்ற தாரணைப்படி பின்வட்டியும் சேர்த்து வாதிக்கு செலுத்த பிரதிவாதிக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்க கோரியும், இவ்வழக்கின் செலவுதொகையினை பிரதிவாதி, வாதிக்கு செலுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கக்கோரியும், மற்றும் இதர பரிகாரங்கள் வழங்கி தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்க கோரி வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்** :-

பிரதிவாதிகள் தங்களுடைய அவசர நிமித்தம், அத்தியாவசிய குடும்ப செலவிற்காகவும், சில்லரைக் கடன்களை தீர்ப்பதற்காகவும், வாதியிடம் கடந்த 07.05.2014 ம் தேதி ரொக்கம் ரூ.6,00,000/- கடனாகப் பெற்றுக்கொண்டு ஷை கடன் தொகைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100-க்கு ரூ.1.00/-வீதம் வட்டி செலுத்த ஒப்புக்கொண்டு ஷை நேதியில் இராஜபாளையத்தில் வைத்து வாதிக்கு ஆதரவாக ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்துள்ளனர். புரோநோட்டுக் கடன் தொகையில் அசலுக்காகவும் வட்டிக்காகவும், நாளது தேதி வரை பிரதிவாதிகள் வாதிக்கு எந்த தொகையும் திருப்பி செலுத்தவில்லை. வாதி ஷை புரோநோட்டுக் கடன் தொகையை திருப்பிச் செலுத்துமாறு பிரதிவாதிகளிடம் தாடர்ந்து கேட்டுவருகிற போதிலும், பிரதிவாதிகளும் விரைவில் திருப்பிச் செலுத்துவதாகவே கூறி வீண் காலதாமதம் செய்து வருகிறார். இந்த நிலையில் பிரதிவாதிகள் வாதியிடம் கடன் பெற்றிருப்பது போன்று வேறு பலரிடமும் கடன்கள் பெற்றுள்ளார் என்பதும், தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை வேறு நபர்களுக்கு வில்லங்கம் மற்றும் கிரையங்கள் செய்துவிட்டு வாதிக்கு கொடுக்கவேண்டிய கடனை

திருப்பிக் கொடுக்காமல் ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட நோக்கத்துடன் இருந்து வருகின்றனர். பிரதிவாதிகள் ஷை புரோநோட்டுப்படி வாதிக்கு செலுத்தவேண்டிய கடன் தொகையை வட்டியுடன் திருப்பி செலுத்த கடமைப்பட்டவராவார்கள். வாதியால் அசல் கேட்டு தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளார்

3) **2 ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரை சுருக்கம் :-**

வாதியின் தாவா சுத்தப் பொய் ஆகும். வாதிக்கு தாவா வழக்கில் யாதொரு பரிகாரமும் கிடைக்கக் கூடியது இல்லை. இதில் வியக்தமாய் இந்த பிரதிவாதியால் ஒப்புக் கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்றவைகளை வாதியே கண்டிப்பாக நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

இந்நிர் வாதியும், 1 ம் பிரதிவாதியும் சேர்ந்து வாதியிடம் தங்களுடைய அவசர நிமித்தம், அத்தியாவசிய குடும்ப செலவிற்காகவும், சில்லரைக் கடன்களை தீர்ப்பதற்காகவும் ரூ.6,00,000/- (ரூபாய் ஆறு லட்சம் மட்டும்) ரொக்கம் கடனாக பெற்றுக் கொண்டு 07.05.2014 ம் தேதி ஒரு பிராமிசரி நோட்டு எழுதி கொடுத்திருப்பதாகவும், ஷ அசல் துகைக்கு மாதம் 1-க்கு ரூ.100/-க்கு வட்டி ரூ.1/- வீதம் வட்டி செலுத்துவதாக ஒப்புக் கொண்டு உள்ளதாகவும் கூறியிருக்கும் விஷயங்கள் யாவும் சுத்தப் பொய்யாகும்.

தாவா பிராமிசரி நோட்டு துகையையும், வட்டியையும் செலுத்தும்படி பிரதிவாதியிடம், வாதி நேரில் துடர்ந்து கேட்டு வந்த போதிலும், பிரதிவாதி விரைவில் திருப்பி செலுத்துவதாக கூறி வீண் காலதாமதம் செய்து வந்ததாகவும் கூறி இருக்கும் விஷயங்கள் யாவும் பொய் என்று இந்த பிரதிவாதியால் கூறப்படுகிறது. மேலும் வாதி தாக்கல் செய்துள்ள பிராதின் 3 வது பாராவில் கூறியுள்ள விசயங்கள் யாவும் வாதியால் ஜோடிக்கப்பட்டவை என்று இந்த பிரதிவாதியால் கூறப்படுகிறது.

உண்மையில் இந்தநம்பர் 2ம் பிரதிவாதி வாதியின் மனைவி மணிமேகலை என்பவரிடம் 20.10.2010 ம் தேதியில் ரூ.1,00,000/-க்கு 2ம் பிரதிவாதி தனக்குப் பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து அடமானம் வைத்துள்ளார். மேலும் 2013-ம் வருடம் மத்தியில் வாதி நடத்தி வந்த ரூ.5,00,000/-க்கான ஏலச் சீட்டையும், பிரதிவாதி ஏலம் எடுத்து உள்ளார். இது காரணமாக மேற்படி சீட்டு பாக்கி துகைக்கு செக்யூரிட்டியாக இந்த நம்பர் 2ம் பிரதிவாதியிடமும், மேற்படியாரின் கணவரான 1ம் பிரதிவாதியிடமும் பிராமிசேரி நோட்டுப் பாரத்தில் ஒன்றும் எழுதாமல் ரெவின்யூ ஸ்டாம்பு மட்டும் ஒட்டி இந்த பிரதிவாதிகளிடம் வாதி கையெழுத்துக்கள் பெற்றுக் கொண்டார்.

மேற்படி சீட்டு துகைக்கு கட்ட வேண்டிய பாக்கி துகைகளுக்காக, மேலே கூறியிருக்கும் அடமானக் கடனை தீர்க்கும் வகைக்கும் வாதி கேட்டுக் கொண்டபடி வாதியின் மனைவி மணிமேகலை பெயருக்கு ஒருபவர் பத்திரம் எழுதிக் கொடுக்கும்படி 2ம் பிரதிவாதியை கேட்டார். அவ்வாறு எழுதிக் கொடுத்தால், வாதியும், ஷெயாரின் மனைவியும் சேர்ந்து பவர் பத்திரத்தில் கண்ட சொத்துக்களை நல்ல விலைக்கு விற்று அடமானக் கடன், சீட்டுக்கு கட்ட வேண்டிய பாக்கி துகைகளையும், வாதியே கட்டி தீர்ப்பதாகவும், பிரதிவாதிகளின் வேறு கடன்களையும் தீர்த்து விடுவதாக கூறியதை நம்பி, 03.01.2013-ம் தேதி வாதியின் மனைவி பெயருக்கு ஒரு ரிஜிஸ்டர் பொது அதிகாரப் பத்திரம் இந்த நம்பர் 2-ம் பிரதிவாதியால் எழுதிக் கொடுக்கப்பட்டது. அதனை மையமாக வைத்து இந்த நம்பர் வாதி தன்னுடைய மனைவியிடம் இருந்து 04.01.2013-ம் தேதி ஷ பொது அதிகாரப் பத்திரத்தில் கண்ட சொத்துக்களை ரூ.7,25,000/-க்கு ஒரு கிரைய உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டார். வாதியே கடன்களை அடைத்துவிடுவதாக கூறியும் அதன் சொத்தை கிரையம்

செய்யும் பொழுது ஷை தொகை கிரையத்துக்கு யாராவது பெற்று கொண்டால் ரூ.7,25,000/- போக கூடுதலாக இருக்கும் துகையை 2-ம் பிரதிவாதிக்கு கொடுப்பதாக வாதி கூறியதின் அடிப்படையில் அதனை 2-ம் பிரதிவாதி ஒப்புக்கொண்டார். சுமார் 3 வருடம் கழித்த பின்னர் சுமார் ரூ.18,00,000/-ம் பெறக் கூடிய சொத்தை ஒரு பெத்தம்மாள் என்பவருக்கு கிரையம் பேசி சார்பதிவாளர் மதிப்பு பிரகாரம் ரூ.9,50,000/-க்கு கிரையத்திற்கு 29.02.2016-ல் வாதியின் மனைவி மணிமேகலை கிரையத்துக்கு கொடுத்துவிட்டார். ஷ தேதியில் கிரையப் பத்திரம் பதிவு செய்வதற்கு முன்னர் அடமானக் கடன் துகை ரூ.1,00,000/- த்தை க்ஷ 29.02.2016-ம் தேதி சார்பதிவாளர் அலுவலகத்தில் பணப்பற்று ரசீது எழுதி பதிவு செய்யப்பட்டது.

இந்தநிலையில் பிரதிவாதிகள் கூடுதல் கிரையத்துகை வாதியிடமும், வாதியின் மனைவியிடமும் கேட்டதற்கு சிலவுகள் போக பாக்கி துகையை கொடுப்பதாக கூறினார்கள். கூறிய பிரகாரம் துகை கொடுக்காததால் பல தடவைகள் பிரதிவாதிகள் வாதியிடம் கேட்ட பொழுது, வாதி காலம் கடத்தி வந்தார். இதனால் கோப்பட்டு, சீட்டு நடத்திய காலத்தில் பிரதிவாதிகளிடம் வாதியால் பெற்றிருந்த நிரப்பப்படாத புரோநோட்டில் ஸ்டாம்பு ஒட்டி பிரதிவாதிகளிடம் கையெழுத்து பெற்று இருந்த புரோநோட்டை மோசடியாக நிரப்பி உற்பத்தி செய்து வாதி எந்தவிதமான முன் அறிவிப்பும் கொடுக்காமல் தாவா வழக்கை தாக்கல் செய்திருக்கிறார். இதிலிருந்தே வாதியின் மோசடி நன்றாக தெரிகிறது. மேலும் ரூ.1,00,000/-க்கு அடமான பத்திரம் பதிந்து வாங்குபவர்கள் ரூ.6,00,000/-ம் பிராமிசேரி நோட்டின் பேரில் கடன் கொடுத்து இருப்பதாக கூறியிருப்பது மோசடியாகவும், விந்தையாகவும் இருக்கிறது. வாதியிடம் இந்த பிரதிவாதிகள் பிராமிசேரி நோட்டின் பேரில் எந்தவிதமான துகையும் பெற்றுக் கொள்ளவில்லை. கூடுதலான கிரையத் தொகையை

கொடுக்கும்படி பிரதிவாதிகள் கேட்டதால், சீட்டு எடுக்கும்பொழுது அதற்கு செக்யூரிட்டியாக பெற்று இருந்த நிரப்பப்படாத தாவா புரோநோட்டை மோசடியாக உற்பத்தி செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

வாதியின் வியாஜ்ஜிய மூலம் பொய். வாதிக்கு தாவா வியாஜ்ஜியத்தில் யாதொரு பலனும் கிடைக்கக் கூடியதில்லை. எனவே, வாதி தாக்கல் செய்துள்ள தாவா வழக்கினை இந்த 2ம் பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) **வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதில் வழக்குரை சுருக்கம்** :-

1ம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் பொய்யென்றும் உண்மைக்கு புறம்பானது என்றும் மறுக்கப்படுகிறது. இதனடியில் தெளிவாக ஒப்புக்கொள்ளப்படும் விவரங்கள் தவிர 1ம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள விவரங்கள் யாவும் பொய்யென்றும், உண்மைக்கு புறம்பானவை என்று மறுக்கப்படுகிறது. அவைகள் ஒவ்வொன்றையும் 1ம் பிரதிவாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

2ம் பிரதிவாதி வாதியின் மனைவியிடம் கடந்த 20.10.2010 ம் தேதி ரூ.1,00,000/- கடன் வாங்கியிருந்ததாகவும், அதற்காக தன்னுடைய சொத்தை அடமானம் வைத்திருந்தார் என்றும் சொல்லியிருப்பது உண்மையென்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆனால் 2013ம் வருடம் மத்தியில் வாதி நடத்தி வந்த ரூ.5,00,000/-ற்கான ஏலசீட்டை பிரதிவாதி ஏலம் எடுத்ததாகவும், ஏலச்சீட்டு பாக்கிக்காக பிரதிவாதிகளிடம் ஒன்றும் எழுதாத பிராமிசிரி நோட்டு பாரத்தில் ஸ்டாம்பு மட்டும் ஒட்டி கையெழுத்து பெற்றுக்கொண்டதாகவும் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் முழுபொய்யாகும். அதுபோன்று ஏலச்சீட்டு

எதுவும் வாதி நடத்தவில்லை. அதற்காக செக்யூரிட்டிக்காக பிரதிவாதிகள் எழுதப்படாத புரோநோட்டு எதுவும் வாதிக்கு கொடுக்கவில்லை.

வாதி, சீட்டு பாக்கிக்காவும் அடமானக்கடன் பாக்கிக்காகவும், வாதியின் மனைவி மணிமேகலை பெயருக்கு ஜெனரல் பவர் பத்திரம் எழுதிக்கொடுக்குமாறு 1ம் பிரதிவாதியிடம் கேட்டதாகவும், அதை வைத்து சொத்தை நல்ல விலைக்கு விற்று அடமானக்கடன் மற்றும் சீட்டுக்கடனுக்கு பாக்கித்தொகைகளை வாதி கட்டி வரவு வைப்பதாகவும், வேறு கடன்களை தீர்த்துவிடுவதாகவும் கூறியதாகவும் அதை நம்பி 3.1.2013ம் தேதி 2ம் பிரதிவாதி ஜெனரல் பவர் பத்திரம் வாதியின் மனைவிக்கு எழுதிக்கொடுத்ததாகவும் சொல்லப்பட்டுள்ள விவரங்களும் அப்பட்டாமான பொய்யென்று மறுக்கப்படுகிறது. 03.01.2013 தேதி 2 பிரதிவாதி வாதியின் மனைவிக்கு எழுதிக்கொடுத்துள்ள ஜெனரல் பவர் பத்திரத்திற்கும் தாவா புரோநோட்டுக்கடனுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. 2ம் பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட ஒரு சொத்தினை வாதியின் மனைவிக்கு கிரையம் செய்ய ஒப்புக்கொண்டு வாதியின் மனைவியும் 2ம் பிரதிவாதியும், அவர்களுக்குள் ஒரு ஏற்பாடு செய்துகொண்டனர். அதன் தொடர்ச்சியாக 2ம் பிரதிவாதி, வாதியின் மனைவிக்கு கடந்த 3.1.2013 தேதி ஒரு ஜெனரல் பவர் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்.

2ம் பிரதிவாதி ஒப்புக்கொண்டதின் அடிப்படையில் 2ம் பிரதிவாதிக்காக கடந்த 4.1.2013ம் தேதி வாதி பெயருக்கு ஒரு கிரைய உடன்படிக்கையும் ஏற்படுத்தப்பட்டது. அவ்வாறு ஏற்பட்ட கிரைய ஒப்பபந்தத்திற்கான தொகைகளை 2ம் பிரதிவாதி வாதியின் மனைவியிடம் இருந்து அந்த சமயத்திலேயே பெற்றுவிட்டார். அதற்கும், தாவா புரோநோட்டுக்கடனுக்கும் எந்தவித சம்மந்தமும் கிடையாது. வாதியே கடன்களை

அடைத்துவிடுவதாக கூறியும், சொத்தை கிரையம் செய்யும்பொழுது 5.7,25,000/- போக கூடுதலாக இருக்கும் தொகையை 2ம் பிரதிவாதிக்கு வாதி கொடுத்துவிடுவதாக கூறியதாகவும், அதை 2ம் பிரதிவாதி ஒப்புக்கொண்டதாகவும், 3 வருடம் கழித்த பின்னர் ரூ.18,00,000/- பெறுமான சொத்தை பெத்தம்மாள் என்பவருக்கு 29.2.2016ம் தேதி ரூ.9,50,000/-ற்கு கிரையம் செய்ததாகவும், சொல்லப்பட்டுள்ள விவரங்கள் அப்பட்டமான பொய்யாகும்.

2ம் பிரதிவாதி 03.01.2013ம் தேதி வாதியின் மனைவிக்கு ஜெனரல் பவர் பத்திரம் எழுதிக்கொடுத்து அதனடிப்படையில் கிரையம் ஒப்பந்தம் ஏற்பட்டு அந்த சொத்திற்கான முழுகிரையதொகை ரூ.7,15,000/-த்தை கடந்த 4.1.2013 தேதி வாதியின் மனைவியிடம் பெற்றுக்கொண்டு ஒரு பணப்பற்று ரசீது எழுதிக்கொடுத்துள்ளார். ஷை பணப்பற்று ரசீதில் 1ம் பிரதிவாதி சாட்சி கையெழுத்து செய்துள்ளார். 4.1.2013 தேதிய 20 பிரதிவாதி எழுதிக்கொடுத்துள்ள பணப்பற்று ரசீதை பார்த்தாலே தாவா புரோநோட்டுக்கடனுக்கும் ஷை ஜெனரல் பவர் பத்திரத்தில் கண்ட சொத்து கிரையம் செய்யப்பட்டதற்கும் எந்தவித சம்மந்தமும் கிடையாது என்றும் தெளிவாகும். வாதியிடம் பிரதிவாதிகள் நல்லமுறையில் பழகி வந்ததால் ஷை சொத்து சம்மந்தப்பட்ட ஜெனரல் பவர் பத்திரமும் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது. 2ம் பிரதிவாதி ஷை ஜெனரல் பவர் பத்திரத்தில் கண்ட சொத்திற்கான கிரையதொகை முழுவதையும் பெற்றுக்கொண்டு பணப்பற்று ரசீது 4.1.2013ம் தேதி எழுதிக்கொடுத்துவிட்டதால் அதன்பின்னர் அதை ஆட்சேபிப்பதற்கு சட்டப்படி உரிமை கிடையாது. 2ம் பிரதிவாதி பணப்பற்று ரசீது எழுதிக்கொடுத்துவிட்டதால் வாதியின் மனைவி ஜெனரல் பவர் பத்திரத்தில் கண்ட சொத்தை வேறு நபருக்கு கிரையம் செய்ய

சட்டப்படி உரிமை உள்ளது. ஷை விவரங்கள் அனைத்தும் பிரதிவாதிகளுக்கும் நன்கு தெரியும். அதைபொறுத்து எப்போதும் பிரதிவாதிகள் ஆட்சேபணை செய்தது கிடையாது. மேலும், ஷை கிரையம் செய்யப்பட்ட சொத்தில் ஏற்கனவே வாதியின் மனைவிக்கு இருந்ததும் கிரையப்பத்திரம் எழுதிய சமயத்திலேயே அந்த தொகை வரவு அடமானக்கடன் வைக்கப்பட்டு அடமானம் செல்லடிக்கப்பட்டுள்ளது.

பிரதிவாதிகள் கூடுதல் கிரைய தொகை வாதியிடமும் வாதியின் மனைவியிடமும் கேட்டதாகவும் செலவுகள் போக பாக்கித்தொகையை கொடுக்க ஒப்புக்கொண்டதாகவும், அந்த தொகையை கேட்ட சமயம் வாதி காலம் கடத்தி வந்ததாகவும் அதனால் கோபப்பட்டு சீட்டு நடத்திய காலத்தில் வாங்கிய புரோநோட்டை வைத்து முன்னறிவிப்பும் கொடுக்காமல் தாவா வழக்கை தாக்கல் செய்திருப்பதாகவும், ரூ.1,00,000/- ற்கு அடமானம் பதிந்து வாங்கியிருப்பவர் தாவா புரோநோட்டுக்கடனை கொடுக்க வழியில்லை என்றும், பிராமிசிரி நோட்டின் பேரில் பிரதிவாதிகள் எந்தவித கடனும் பெறவில்லை என்றும், சீட்டு எடுக்கும் போது செக்யூரிட்டிக்காக கொடுத்த புரோநோட்டை வைத்து வாதி வழக்கை தாக்கல் செய்திருப்பதாகவும் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் முழுபொய்யாகும். செக்யூரிட்டிக்காக பிரதிவாதிகள் எந்தவித புரோநோட்டும் வாதிக்கு கொடுக்கவில்லை. பிரதிவாதிகள் கூடுதல் கிரையதொகை எதுவும் வாதியிடமோ அல்லது வாதியின் மனைவியிடமோ எப்போதும் கேட்டதில்லை. அவ்வாறு ஏதாவது பிரச்சினை இருந்திருந்தால் கடந்த 2016 ம் வருடத்திலேயே பிரதிவாதிகள் பிரச்சினை செய்திருப்பார்கள். தற்போது வாதிக்கு கொடுக்க வேண்டிய கடனை கொடுக்காமல் ஏமாற்றவேண்டும் என்பதற்காக பொய்யான விவரங்களை கூறி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்.

எனவே, வாதி கோரிய படி தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டுமென்று பதில் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5) பிராது, எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்களை பரிசீலித்து வழக்கு விசாரணைக்காக கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

1. Whether the plaintiff is entitled to recover the sum of the Rs.7,97,200/- along with subsequent interest as prayed for?
2. To what other relief the plaintiff is entitled for?

6) வாதி தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. வா.சா.1ன் குறுக்கு விசாரணையில் பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7) **<u>எழுவினா 1க்கான தீர்வு</u>** :-

இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. ஆவணங்களை பரிசீலனை செய்ததில், கடந்த 07.05.2014 அன்று வாதியிடம் பிரதிவாதிகள் ரூ.6,00,000/- கடனாக பெற்றுக்கொண்டு கடனுக்கு ஆதரவாக சாட்சிகள் முன்பாக வாதிக்கு கடனுறுதி சீட்டு எழுதிக்கொடுத்து கடனை பெற்றுக்கொண்டுள்ளார். பிரதிவாதி மேற்படி அசல் மற்றும் வட்டி தொகையை செலுத்தவில்லை என்றும், எனவே, தொகையை வசூலிக்க கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

வாதி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது, 07.05.2014 அன்று பிரதிவாதிகள், வாதியிடம் ரூ.6,00,000/- கடனாக பெற்றுக்கொண்டு மேற்படி கடனுக்கு ஆதரவாக வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டு எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், பிரதிவாதிகள் தரப்பில்

எதிர்வழக்குரையில் சொத்துக்களை பொறுத்து 2ம் பிரதிவாதி, வாதியின் மனைவிக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்து அன்றைய தினமே பணப்பற்று இரசீது எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், அதன் பின்பு பொது அதிகார ஆவணத்தின் படி வாதியின் மனைவியும் பெத்தம்மாள் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றும், மேற்படி சங்கதிகளுக்கும் மேற்படி ஆவணங்களுக்கும் தாவா கடனுறுதி சீட்டுக்கும் சம்பந்தம் இல்லை என்றும், 2ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையியே பிரதிவாதிகள், வாதிக்கு கடனுறுதி சீட்டு எழுதிக்கொடுத்ததாக ஒப்புக்கொண்டுள்ள நிலையில் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை பொறுத்து பிரதிவாதி தான் நிரூபிக்க வேண்டும் என்றும், ஆனால் பிரதிவாதி தகுந்த சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபிக்க தவறியுள்ளார் என்றும், வாதி வா.சா.1, 2 சாட்சியம் மூலமாக நிரூபித்துள்ளார் என்றும், எனவே, வாதி கோரிய படி தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டுமென்று வாதுரை செய்தார்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது, வா.சா.ஆ.4 பணப்பற்று இரசீதிலுள்ள கையொப்பமும், வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் உள்ள 2ம் பிரதிவாதியின் கையொப்பமும் வேறுவேறான கையொப்பம் என்று வா.சா.1 தனது சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், மேற்படி 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை வாதியின் மனைவி பொது அதிகாரம் பெற்று 3ம் நபருக்கு கிரையம் கொடுத்துள்ள நிலையில் வாதி பிரதிவாதிகளுக்கு கடன் கொடுத்ததாக கூறுவது நம்பக்கூடியதாக இல்லை என்றும், வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பமும், வா.சா.ஆ.4 ல் உள்ள கையொப்பமும் வேறுவேறாக உள்ளது என்று பிரதிவாதிகள் தாவா கடனுறுதி சீட்டை

எழுதிக்கொடுக்கவில்லை என்றும், தாவா வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று வாதுரை செய்தார்.

ஆவணங்களை பரிசீலினை செய்ததில், 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை 03.01.2013 அன்று வாதியின் மனைவிக்கு ஒரு பொது அதிகாரம் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி பொது அதிகார ஆவணத்தின் படி 04.01.2013 அன்று வாதியின் மனைவி வாதியும் ஒரு கிரைய ஒப்பந்தம் மேற்கொண்டு மேற்படி கிரைய ஒப்பந்தமானது ரத்து செய்துள்ளனர். மேற்படி கிரைய ஒப்பந்த தேதியன்றே 2ம் பிரதிவாதி வாதியின் மனைவிக்கு ஒரு பணப்பற்று இரசீது எழுதிக்கொடுத்துள்ள விபரம் வா.சா.ஆ.4 ல் மூலம் தெரியவருகிறது. மேற்படி பணப்பற்று இரசீது எழுதிக்கொடுத்த பின்பு தான் 07.05.2014 அன்று வாதியிடம், பிரதிவாதிகள் ரூ.6,00,000/- கடனாக பெற்றுக்கொண்டு மேற்படி கடனுக்கு ஆதரவாக கடனுறுதி சீட்டு எழுதிக்கொடுத்துள்ளது தெரியவருகிறது. மேற்படி வா.சா.ஆ.3 ன் படி பொது அதிகாரம் பெற்ற வாதியின் மனைவி பி.வா.சா.ஆ.2 ன் படி பெத்தம்மாள் என்பவருக்கு வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டிற்கு பிறகு 2 வருடங்கள் கழித்து கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி தாவா வழக்கானது வா.சா.ஆ.3, 4, பி.வா.சாஆ.1, 2 ஆவணங்களில் கண்ட சொத்து சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இல்லை. எனவே, மேற்படி ஆவணங்களை பொறுத்த வரை இந்த வழக்கில் பரிசீலினை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. மேற்படி ஆவணங்கள் பற்றி பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், 2ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் பரிசீலினை செய்ததில், பிரதிவாதிகள் வாதியிடம் கடனாக பெற்று மேற்படி கடனுக்கு ஆதரவாக கடனுறுதி சீட்டு எழுதிக்கொடுக்கவில்லை என்று மறுத்திருந்தாலும் இந்த நம்பர் 2ம்

பிரதிவாதியிடமும், மேற்படியாரின் கணவரான 1ம் பிரதிவாதியிடமும், பிராமிசேரி நோட்டு பாரத்தில் ஒன்றும் எழுதாமல் ரெவின்யூ ஸ்டாம்பு மட்டும் ஒட்டி இந்த பிரதிவாதிகளிடம் வாதி கையெழுத்துக்கள் பெற்றுக்கொண்டார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆக மேற்படி எதிர்வழக்குரையிலேயே பிரதிவாதிகள் வாதி பெயருக்கு ஒரு கடனுறதி சீட்டு எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் 2013 ம் ஆண்டு வாதி சீட்டு நடத்திவருவதாகவும், மேற்படி ஏல சீட்டை பிரதிவாதிகள் எடுத்ததால் மேற்படி ஏலத்திற்காக கடனுறுதி சீட்டு எழுதிக்கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டிருந்தாலும், மேற்படி சங்கதிகளுக்கு பிரதிவாதிகள் யாரும் முன்னிலையாகி சாட்சியம் அளிக்கவில்லை. மேற்படி சங்கதிகளுக்கு ஆதரவாக பிரதிவாதிகள் தரப்பில் ஆவணங்களோ, சாட்சியங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை. பிரதிவாதிகள் தரப்பில் வாதி தரப்பில் விசாரணை செய்யப்பட்ட வா.சா.2 தனது சாட்சியத்தில் வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் கண்ட 2ம் பிரதிவாதியின் கையொப்பமும், வா.சா.ஆ.4 பணப்பற்று இரசீதில் உள்ள 2ம் பிரதிவாதியின் கையொப்பமும், வித்தியாசமாக உள்ளது என்று ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார் என்று எடுத்துரைக்கப்பட்டது. வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டிலும், வா.சா.ஆ.4 பணப்பற்று இரசீதிலும் கையொப்பத்தை பரிசீலினை செய்ததில், மேற்படி கையொப்பங்களை பொறுத்தவரை 2ம் பிரதிவாதியின் கையொப்பம் வித்தியாசமாக உள்ளது.

மேற்படி 2ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரை, வக்காலத்து ஆகியவற்றை பரிசீலினை செய்ததில், வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் கண்ட கையொப்பம் போன்றே 2ம் பிரதிவாதி கையொப்பம் செய்துள்ளார். இது சம்பந்தமாக இந்நீதிமன்றமே பிரிவு 73 இந்திய சாட்சிய சட்டத்தின் கீழ் பரிசீலினை செய்ததில், எதிர்வழக்குரை, வக்காலத்து

ஆகியவற்றிலுள்ள 2 ம் பிரதிவாதியின் கையொப்பமும், வா.சா.ஆ.1 ல் உள்ள கையொப்பமும் ஒன்று போல் தான் அமைந்துள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

இது குறித்து வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட

S.A.No.1003 of 2009
and M.P.No.1 of 2009
Ponnambalam Vs Dhanalakshmi

Section 73 of the Evidence Act permits the Court to compare the signature though rarely, in the absence of initiative from the defendant to call for the experts. The Court to satisfy itself, has to exercise its power under section 73 of the Evidence Act. It is the burden on the person who asserts a fact contrary to the document. In the case under consideration, the plaintiff has placed the pro-note and the witnesses before the Court to prima facie establish that the pro-note was executed by the plaintiff, the signature as well as the thumb impression found on the document is that of the defendant

In K.P.O. Moideenkutty Hajee vs Pappu Manjooran & Anr Reported in 1996 JT 1996 (3) 329 =1996 SCALE (2)784 , the Hon'ble Supreme Court has observed :-

" The burden initially rests on the plaintiff who has to prove that the promissory note was executed by the defendant. On its proof the rule of presumption under section 118 helps him to shift the burden on the defendant. The burden of proof as a question of law rests, therefore, on the plaintiff but as soon as the execution is proved, Section imposes a duty on the Court to raise a presumption in his favour that the said instrument was made for consideration. That presumption shifts the burden of proof, namely, establishing a case that the promissory note is not supported by consideration to the defendant. The defendant may adduce direct or circumstantial evidences to prove that the promissory note was not supported by consideration. If he adduces acceptable evidence, the burden again shifts to the plaintiff. If the circumstances relied on by the defendant are so compelling, the burden is on the plaintiff to prove the contra. The statutory presumption, though is one of law, is also a question of fact to be proved in each case." என்றும்

In Kalaimani –vs- Chinnapaiyan alias Perumal Gounder reported in 2004 (5) CTC 617 -Division Bench of this Court made the following observations:

"In addition to the modes of proving the handwriting as provided by section 45 and 47 of the Indian Evidence Act, section 73 of the Act provides another mode by direct comparison of the disputed signatures or written or finger impression with one, which is admittedly genuine or proved to be so. Section of the Indian Evidence Act enables the Court using its own eyes to compare the disputed signatures with the admitted signatures. It happens not infrequently that in spite of evidence rendered, the Court cannot help comparing handwriting or signature with their own eyes for the proper assessment of the value of the total evidence."

என்று சொல்லப்பட்டுள்ள சங்கதியானது இந்த வழக்கிற்கு பொருந்துவதாக உள்ளது.

மேலும் பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.2 வாதியும், பிரதிவாதியும் பெற்ற ஆவணங்களிலும் சாட்சியமாக கையெழுத்து செய்துள்ளார் என்று எடுத்துரைக்கப்பட்டது. வா.சா.2 தனது சாட்சியத்தில் வாதிக்காக கிரைய ஆவணத்திலும், வழக்கு கடனுறுதி சீட்டிலும் வா.சா.ஆ.1, பி.வா.சா.ஆ.1, வா.சா.ஆ.4 ல் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்று ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்படி வா.சா.ஆ.3, 4, பி.வா.சா.ஆ.1, 2 ல் சாட்சி கையொப்பம் செய்ததால் மட்டுமே வா.சா.2 ன் சாட்சியத்தை நிராகரிக்க முடியாது. வா.சா.2 வாதியின் உறவினர் என்பதால் மட்டுமே மேற்படி வா.சா.1 ன் சாட்சியத்தையும் நிராகரிக்கக்கூடிய அளவில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை அணுகப்படவில்லை. பிரதிவாதிகள் தனது வழக்குரையில் வாதிக்கு ஒரு கடனுறுதி சீட்டு எழுதிக்கொடுத்தேன் என்று ஒப்புக்கொண்டுள்ள நிலையில் வா.சாஆ.3, 4, பி.வா.சா.ஆ.1, 2 ஆவணங்களை பொறுத்த வரை இந்த வழக்கிற்கு தொடர்பில்லாத ஆவணங்கள் இல்லை என்றும், வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டு பிரதிவாதியால் எழுதிக்கொடுக்கப்பட்ட ஆவணம் என்று இந்நீதிமன்றத்தால் வாதி தரப்பில் வா.சா.1, 2 ன் சாட்சியம் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட

2026 1 MWN (civ) 78
Velchandiran Vs Rajavanniyan

" Section 118 of the Negotiable Instruments Act, 1881, contemplates that once the signature in the promissory note is admitted, presumption would go to support execution of the pronote. Therefore, once the defendant admitted the execution of the Promissory note but pleaded that it was not supported by consideration, the burden is on the defendant to show that the promissory note was not supported by consideration and it is a fabricated document " என்றும்,

" Since the plaintiff has discharged his initial burden of proof that the suit promissory note is a genuine one, the onus is on the defendant to establish that the said document is a fabricated one "

என்று சொல்லப்பட்டுள்ள சங்கதியானது இந்த வழக்கிற்கு பொருந்துவதாக உள்ளது.

வாதி வா.சா.1, 2 ன் சாட்சியத்தின் மூலமாகவும், தகுந்த ஆவணங்களின் மூலமாகவும் நிரூபித்துள்ளதால் இந்த வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் பிரதிவாதி தரப்பு வழக்கை நிரூபிக்கும் விதமாகவும், வாதியின் வழக்கை பொய்பிக்கும் விதமாகவும் சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை. பிரதிவாதிகளும் நீதிமன்றத்தில் முன்னிலையாகி சாட்சியம் அளிக்கவில்லை. மேற்படி வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் கண்ட கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்று மறுக்கப்படாத நிலையில் வாதி, பிரதிவாதிகளுக்கு கடன் கொடுத்ததையும், பிரதிவாதிகள் கடனுறுதி சீட்டு எழுதிக்கொடுத்ததையும் நிரூபித்துள்ளதால் வாதி கோரும் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்று முடிவு செய்து அவ்வாறே மேற்படி எழுவினா வாதிக்கு ஆதரவாக விடை காணப்படுகிறது.

**8) <u>எழுவினா 2 க்கான தீர்வு</u> :-**

எழுவினா 1 வாதிக்கு ஆதரவாக விடை காணப்பட்டுள்ளதால் வாதிக்கு வேறு பரிகாரம் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்று முடிவு செய்து அவ்வாறே மேற்படி எழுவினா விடை காணப்படுகிறது.

**9) முடிவில்**,

1. வழக்கு செலவு தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

2. வாதிக்கு, பிரதிவாதி ரூ.7,97,200/-ம், அதில் அசல் தொகை ரூ.6,00,000/-க்கு வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் தீர்ப்பாணை காலம் வரைக்கும் 9% ஆண்டு வட்டியுடனும், தீர்ப்பாணை தேதி முதல் தொகை வசூலாகும் தேதி வரைக்கும் 6% ஆண்டு வட்டியுடனும் செலுத்த வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு ஜூலை திங்கள் 14 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

SHUNMUGAVEL RAJ Digitally signed by SHUNMUGAVEL RAJ

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.

**வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் :-**

வா.சா.1 - சக்கரை

**வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் :-**

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | - | 07.05.2014 | தாவா புரோநோட்டு அசல் |
| வா.சா.ஆ.2 | - | 23.01.2017 | 1, 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கான வில்லங்க சான்று சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | - | | பொது அதிகார ஆவணம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4 | - | | பணப்பற்று ரசீது |

**பிரதிவாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் :- இல்லை**

**பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்-**

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | - | கிரைய உடன்படிக்கை |
| பி.வா.சா.ஆ.2 | - | கிரைய ஆவணம் |

SHUNMUGAVEL RAJ Digitally signed by SHUNMUGAVEL RAJ

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.